முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1204

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. தர்ம வேலி கொண்ட அரங்கனே
தவமாக வாழும் தேசிகனே
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பிரணவப்பிரியனாய் வந்த ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆசிதனை சுபகிருது கலையின் திங்கள்
(சுபகிருது வருடம் தை மாதம் முதல் நாள் 15.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனே உலகை மாற்றும் மாதவசி
உயிர்கொலை நீக்கி உலகோரை மீட்கும் மகா ஞானி
வரங்கள் பெற்று அரங்கன் வழி தொடர்ந்தால் போதும்
வையகத்தார்க்கு ஞான சித்தியோடு
4. சித்தியோடு இனி பிறவாத பெரும்பேரு
சித்திக்கும் இந்த பிறவி தன்னிலே
உத்தமமாய் அரங்கன் திருவடி பற்ற
உலகோர்க்கு உயர்ஞானம் பெறுவதோடு ஆறுமுகன் என் காட்சியும் உறுதியாகி
5. ஆகியே உலகோர் ஞானலோகம் படைக்கும்
ஆற்றலும் அற்புதமும் பெறுவர்
அரங்கன் தர்மத்தை அனுகி அவைதர்மம் காத்து வரும் அன்பர்களெல்லாம்
அகிலத்தில் ஞானியாவது உறுதியப்பா
6. உறுதிகொண்டு ஆறுமுகன் யான்
உயர் வரம் தந்தேன்
இந்தவித உத்திராயண நன்னாளிலே
நாளதனில் அரங்கனுக்கு சக்தி கூடி வர
7. ஞானம் கருதி வருபவர் எல்லாம் பிசகின்றி சித்தி கண்டு
ஞானவான்களாக ஞானிகளாகவே மாற்றம் கண்டு சிறப்பர்
ஞானதேசிகன் அமைக்க உண்டான
ஞான ஆட்சியில் இடம்பெற்றும் திளைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–